**திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறும் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக் கூற்று**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கை நிதியத்தின் 2022 திசம்பர் 31இல் உள்ளவாறான நிதிக் கூற்று மற்றும் அந்த திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான கூற்று, நிதி சொல்லாற்றல் மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் மற்றும் போதுமான கணக்கு கொள்கைகளுக்கான தகவல்கள் உள்ளடக்கிய நிதி கூற்றுகளுக்குரிய குறிப்புகளை உள்ளடக்கி 2022 திசம்பர் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக் கூற்று, 1986ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன நம்பிக்கை நிதிய சட்டத்தின் 11(4)ஆம் பிரிவின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு சட்டத்தின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டம் மற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் இப்பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ் கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வில் பகுதிகளாக என்னால் கணக்காய்வு செய்யும்போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் மற்றும் தொழில்முறை சந்தேகத்துடன் செயற்படுத்தப்பட்டது. மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம் பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்துக்கான அடிப்படையொன்றினை வழங்கும்போது, மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனம் காணல் மற்றும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம் பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராய மொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கப்பூர்வமாக செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்;

- நம்பிக்கைப் பொறுப்பின ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 53 இற்கு இணங்க நிதிக் கூற்றுக்களில், அறிக்கையிடப்பட்ட அனைத்து எண்ணியல் தகவல்களும் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றாலும், கூட்டுத்தாபன பொறுப்பு, நிறை மாற்றங்களின் கூற்று முன்னைய வருடம் தொடர்பான ஒப்பீட்டுத் தகவல்களும் வெளியிடப்பட-வில்லை. | 2023ஆம் ஆண்டில் இருந்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பந்தி இலக்கம் 107/(அ) மற்றும் மேலதிகம் பிரகாரம், ஆண்டு தோறும் பெறப்படும் மீண்டுவரும் உதவிகளின் வருமானமாக கணக்கிடப்படாத பயன்பாட்டு ஏற்பாடாக கணக்கிடப்பட்டு வருடாந்த ஓய்வூதியமாக வழங்குவதற்குத் தேவையான பணம் மட்டும் வருடத்தின் வருமானமாக கணக்கிட்டு வருட இறுதியில் செலவிடப்படாமல் மீதியாக உள்ள ரூபா 3,153,000 மீதி திறைசேரி உதவியின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தது. | நம்பிக்கைப் பொறுப்புக்கு மாதாந்தம் கிடைக்கும் திறைசேரி உதவி மாதாந்த ஓய்வூதியம் வழங்குவதற்கு மட்டும் பயன்படுத்தப்-படுவதுடன் மீதி இருப்பு அடுத்துவரும் ஆண்டுக்குரிய உதவி கிடைக்கும் வரை மாதாந்த ஓய்வூதியம் வழங்குவதற்கு பயன்பாட்டில் உள்ள நிதி நிலை கூற்றில் தற்போதைய பொறுப்புகளின் கீழ் திரும்ப செலுத்த வேண்டிய மீதியாக மீதித் தொகை காட்டப்படவில்லை. | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மேற்படி விடயத்தின் காரணமாக மீளாய்வு வருடத்தில் திறைசேரியில் இருந்து பெறப்பட்ட மீண்டுவரும் உதவியாக ரூபா 7,500,000 மாகவும், அது ரூபா 8,278,000 மாகவும், காட்டப்பட்டு, வருடத்தில் வருமானம் ரூபா 778,000 அதிகமாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது | மீளாய்வு வருடத்தில் இந்த தொகை செலவழிக்கப்பட்ட விதம் லருமானம் மற்றும் செலவின் கணக்கு குறிப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளது. | பிரமாணத்தின் நியதிகளுக்கு அமைவாக வருடத்துக்கு பெறப்படும் மீண்டுவரும் உதவி சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்காய்வுக்கு எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை

| **விடயம்** | **பணம் ரூபா** | **வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| ஆரம்ப மூலதனம் | 05 மில்லியன் | திறைசேரியிலிருந்து பணம் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்து வதற்கான எழுத்து மூலமான சான்றுகள் மற்றும் திறைசேரியின் கூற்று உள்ளடக்கப்பட வில்லை | இந்த விடயத்தின் உண்மைத் தன்மையை நிரூபிப்பதற்கு எழுத்து மூலமான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. அத்துடன் அது தொடர்ாக மேலும் கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட் எழுத்து மூலமான சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுட னான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1986ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன பொறுப்பு நிதிய சட்டத்தின் 06(2)(ஈ) பிரிவு | நம்பிக்கை நிதியத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆட்சேர்ப்பு மற்றும் ஊழியர்கள் ஈடுபடுத்தல், சிரம ஊதியம் வழங்கல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்டங்கள் உருவாககப்பட வேண்டும் என்றாலும், பொறுப்பின் நடைமுறைக்கு வந்த நாள் முதல் இதுவரை அந்த சட்டம் உருவாக்கல் அல்லது பொறுப்பின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான பணிக் குழு நியமிக்காயைால் தேசிய திரைப்பட கூட்டுத்தாபன பணிக்குழு, பொறுப்பின் செயற்பாட்டுக்கு நியமிக்கப்பட்டிருந்தது. | இந்த விடயம் தொடர்பாக 89வது பொறுப்புச் சபைக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | பிரமாணத்தின் நியதிகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 நிதி மீளாய்வு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஜுலை மாதத்தின் போது முதலீட்டு வட்டி வீதம் உயர்ந்திருந்த போதும், 2022 ஜனவரி மாதம் முதல் திசம்பர் வரையான காலப் பகுதியில் தோரமாக ரூபா 02 மில்லியன் வரை மிகையான மீதியாக நடைமுறைக் கணக்கில் தேக்கி வைத்திருந்தமையால் பெறக்கூடிய வட்டி வருமானம் நம்பிக்கை நிதியம் இழந்து விட்டது. | நம்பிக்கை நிதிய சபை அனுமதி கிடைக்காமை இதற்கு காரணமாக உள்ளதுடன், எதிர்காலத்தில் முறையான அனுமதிக்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நம்பிக்கை நிதிய சபை முறையான அனுமதியின் பேரில் நிதியத்துக்குரிய மிகையான பணத்தை உடனடியாக முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

# 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 225,556 ஆன மிகை ஒன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 113,069 தொகை ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 112,487 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிதியத்தின் நிறுவன மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 257,027 இனால் அதிகரித்திருந்த போதும் அதற்கு ஒப்பாக ரூபா 363,296 இனால் நிதியத்தின் வருமானம் அதிகரித்தமை இந்த வளர்ச்சிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1986 இன் 03ஆம் திரைப்பட கலைஞர்கள் மற்றும் திரைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டம் | | |
| (அ) 06வது பிரிவின் பிரகாரம் நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிதி வழங்கும் அலலது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆதாரங்களிடம் இருந்து பணமாக அல்லது பொருள் ரீதியாக வழங்கல், பரிசு அல்லது வெகுமதிகளாக ஏற்கப்படலாம். இதில் எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படமையால் நம்பிக்கை நிதியத்துக்கு செலவு சுமையாக மாறி இருந்தது. | நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களை செயற்படுத்துவதற்காக போதுமான வருமானத்தை ஈட்டுவதற்கு பல்வேறு திட்டங்களை செயற்படுத்துவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களுக்கு முகங் கொடுப்பதற்கு மீளாய்வு வருடத்தில் ஏற்பட்ட கொவிட் தொற்று மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார சிக்கல் காரணமாக எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்கு புதிய வேலைத் திட்டங்கள் அல்லது செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களை அடைவதற்கு வருமானம் ஈட்டும் புதிய வழி வகைகளை கண்டறிந்து நிதி நிலையை மேம்படுத்த நவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 03(1)வது பிரிவின் பிரகாரம் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் நிறுவப்பட்ட பொறுப்பு நிதிய குழுவிடம் ஒப்படைக்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்தாலும், 2021 திசம்பர் 31ஆந் திகதி நடைபெற்ற 87வது பொறுப்பு நிதிய குழுக் கூட்டத்தின் பின் 2023 மார்ச் 31ஆந் திகதி வரை ஒரு வருடத்துக்கும் அதிகமான காலம் பொறுப்பு நிதிய குழுக் கூட்டம் நடைபெறாத காரணத்தினால் பொறுப்பு நிதியத்தின் மேம்பாட்டிற்கு எந்தவிதமான செயலூக்க பங்களிப்பும் வழங்கப்பட வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | இக்காலப் பகுதியில் உலகம் முழுவதிலும் பரவி இருந்த கொவிட் தொற்று, நாட்டில் நிலவிய பொருளாதார சிக்கலுடன் அரசியல் மாற்றங்களினால் சுங்க அமைச்சும் மாற்றப்பட்டு புதிய தலைவர் உட்பட பணிப்பாளர் சபையும் ஒரே நேரத்தில் நியமிக்கப்பட்டதுடன் 2023 மார்ச் 31ஆந் திகதி நம்பிக்கை நிதியத்தின் 88வது சபைக் கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கூட்டங்கள் முறையாக நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் பொறுப்புச் சபை நம்பிக்கை நிதியத்தின் முன்னேற்றத்துக்கு தொடர்ந்து பங்களிப்பு செய்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாடுகளை நிறைவேற்றியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரணசிங்க பிரேமதாஸ நினைவு நம்பிக்கை நிதியத்தின் சார்பாக 2019 ஜனவரி மாதத்தில் பெறப்பட்ட வரவு வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 1,000,000 தொகையானது தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் எனும் பெயரில் நிலையான | இத்தொகையை நம்பிக்கை நிதியத்துக்கு 2024ஆம் ஆண்டுக்குள் வைப்பிடுவதற்கு நடவடிக்கை | இந்த நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்ட நோக்கம் அல்லது பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக தாமதமின்றி |

| | | |
|---|---|---|
| வைப்புத் தொகையில் முதலீடு செய்யப்பட்டு வட்டி வருமானம் கிடைத்த பின் 2022 ஜூன் மாதம் 06ஆந் திகதி கூட்டுத்தாபனத்தின் நம்பிக்கை நிதியத்துக்கு மாற்றப்பட்டதுடன், நம்பிக்கை நிதியத்தினால் இத் தொகை 2022 ஆகஸ்து 08ஆந் திகதி வரை 02 மாத காலம் வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிட்ட பின் ஒரு வருட காலத்துக்கு நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் இந்த நம்பிக்கை நிதியம் நிறுவப்பட்ட நோக்கம் அல்லது பணிகளை முன்னெடுப்பதற்கு மீளாய்வு வருட இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை. | எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இத் தொகையை தாமதமின்றி முறையாக முதலீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும். | நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் தாமதமின்றி முதலீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) றுக்மணி தேவி நிதியம் நிறுவப்பட்ட நோக்கம் அல்லது பணிகள் என்னவென்பது குறித்த தகவல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் ரூபா 462,778 அந்த நிதியிலிருந்து எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படாது நிதி நிலைக் கூற்றில் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் கீழ் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. | இந்த நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகை கணக்கிட்டு அந்த தொகை ரீதியாக தெளிவான ஏற்றுக் கொள்ளக்ககூடிய எழுத்து பூர்வமான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. | இந்த நிதியத்தை நிறுவுவது தொடர்பான நோக்கம் பற்றி ஆராய்ந்து பார்த்து அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்பித்தல்.

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் I பகுதியின் 15.1 பிரிவின் மூலம் திருத்தப்பட்ட 877(2)(ஈ) நிதிப் பிரமாணத்துக்கு முரணாக கூட்டுத்தாபன நம்பிக்கை பொறுப்பின் 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்று ஒரு வருட தாமதத்தின் பின் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பித்திருந்ததுடன் அதனோடு செயலாற்றல் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021.12.31ஆந் திகதிய இறுதி வருடத்துக்கான நிதிக் கூற்றுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு அமைவாக 2022.12.31ஆந் திகதிய இறுதி வருடத்துக்கான நிதிக்கூற்று தயாரிப்பதற்கான அனுமதிக்கு பொறுப்புச் சபைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் குறித்த திகதிக்கு நிதிக் கூற்று சமர்ப்பித்தல் வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு சபையினால் | தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு வெற்றிடம் நிலவுவதால் உள்ளக கணக்காய்வு | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு நடாத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடாத்தப்படவில்லை. அத்துடன் அதற்கான அலுவலரை நியமிப்பதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 41(1) பிரிவின் பிரகாரம் நம்பிக்கை பொறுப்பு சபையினால் தமக்கு உதவுவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு வொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் உதவியை பெறுவதற்கு அல்லது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 4.3 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் I பகுதியின் 15.1 பிரிவின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1)(இ) இன் பிரகாரம் நம்பிக்கை நிதியத்தினால் 2022 ஆண்டிற்கான வரவு செலவு ஆவணம் சரி செயப்படவில்லை. அத்துடன் அங்கீகரிககப்பட்ட வரவு செலவு திட்டமின்றி செலவிடப்பட்டுள்ளது. . | நிதி நிலையை அடிப்டையாகக் கொண்ட நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்களுக்கிடையே மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவு மட்டும் நீண்ட காலமாக செயற்பாட்டில் இருப்பதுடன் கொவிட் நிலை மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார சிக்கலினால் பணி குழுவின் சேவைக்கு அழைத்து சேவைக்கு அவசியம் என்ற அடிப்படையில் 2022ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவு ஆவணம் தயாரிக்கபபட்டு 2021ஆம் ஆண்டில் சமர்ப்பிக்க இருந்த நிலையில் உரிய அனுமதியுடன் சமர்பிக்க முடியவில்லை | நிதியத்தின் நோக்கங்களுக்கு அமைவாக வரவு செலவு ஆவணம் முறையாகத் தயரிக்க வேண்டும் அத்துடன் அனுமதிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் இன்றி எந்தச் செலவும் செலவிடலாகாது. |